**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 107/2024**
**Prosecution Witness**:1

| | | | |
|---|---|---|---|
| Name | முத்துகுமரன் (PW1) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of June 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused absent petition U.s. 355 BNSS is filed and allowed)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது பூலாவலசில் குடியிருந்து கொண்டு விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 30.07.2024ம் தேதி மாலை 04.30 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்தபோது எனது அம்மா சாரதாம்பாள் எனக்கு போன் செய்து சிவகிரி தெற்குபாளையம் அருகே தனக்கு சொந்தமான TVS XL 1758 என்ற வண்டியில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றபோது வடக்கு இருந்து மேற்கே திரும்புவதற்காக வந்த Hero Honda வாகனம் மோதிவிட்டதாக தகவல் சொன்னார். நானும் எனது மனைவியும் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். எனது அம்மாவிற்கு இடது கால் பாதத்தில் சுண்டுவிரலுக்கு பக்கத்தில் உள்ள விரலில் இரத்தகாயம் ஏற்பட்டிருந்தது. அடுத்த நாள் சிவகிரி காவல்நிலையத்திற்கு சென்று விபத்து குறித்து புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விபத்து பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனது தாயார் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமான வாகனம் என்றால் எனக்கு சொந்தமானது. அந்த வாகனத்தின் பதிவு சான்றிதழ் 2019ம் வருடத்திலேயே காலாவதியாகிவிட்டது என்றால் சரிதான். சம்பவ

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.17 16:08:55 +0530

நடந்து ஒரு நாள் கழித்து புகார் கொடுக்க சிறப்பு காரணம் உள்ளதா என்றால் மருத்துவமனையில் இருந்ததால் புகார் கொடுக்க காலதாமதமானது. மருத்துவமனையில் இருந்து காவல்நிலையத்திற்கு இண்டிமேசன் கொடுக்கப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் இண்டிமேசன் எதுவும் வாங்கி வந்து கொடுக்கவில்லை. போலீசார் எனது தாயாரை மருத்துவமனையில் வைத்து விசாரித்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதால் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகாரை யார் எழுதினார்கள் என்றால் என்னுடன் வந்தவர் எழுதினார். காவல்நிலையத்தில் வைத்து புகார் எழுதப்பட்டது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:— இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.06.17 16:08:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 107/2024**
**Prosecution Witness**:2

| | | | |
|---|---|---|---|
| Name | **சாரதாம்பாள்** (PW2) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of June 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused absent petition U.s. 355 BNSS is filed and allowed)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது பூலாவலசில் குடியிருந்து வருகிறேன். கடந்த 30.07.2024ம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் நான் வங்கிக்கு செல்வதற்காக எனது TVS வாகனத்தில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வேட்டுவபாளையம் பிரிவிற்குள் செல்ல வலதுபக்கமாக சென்றுகொண்டிருந்தபோது பெரிய இருசக்கர வாகனம் வேகமாகவும், ஆரன் அடிக்காமலும் வடக்கில் இருந்து வந்து மேற்கே திரும்பி என் மீது மோதிவிட்டது. மோதியதில் நான் கீழே விழுந்துவிட்டேன், அதில் எனது இடதுபக்க காலின் சுண்டுவிரலுக்கு அருகில் உள்ள விரலுக்கு முழுவதும் பலத்த காயம் ஏற்பட்டது. விபத்தின் போது பெரிய வாகனத்தை ஓட்டிவந்த நபரை பார்த்தால் அடையாளம் சொல்வேன், பிறகு அருகில் இருந்தவர்கள் என்னை தூக்கி உட்காரவைத்து சிவகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். நான் என் மகனுக்கு போன் செய்து விபத்து பற்றி தகவல் சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலை கிழமேலாக வந்து வடக்கு திசையில் திரும்பும் சாலை என்றால் சரிதான். மேற்படி ரோட்டின் அகலம் சுமார் 60 அடி இருக்கும் என்றால் இருக்கலாம். ரோட்டிற்கு நடுவே வெள்ளை கோடுகள் போட்டிருந்தார்கள் என்றால் சரிதான். ரோட்டின் இடதுபக்க ஓரமும், வலது பக்க ஓரமும் வெள்ளை கோடுகள் போட்டிருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ நடந்த சமயத்தில் எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான்,

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.17 16:09:05 +0530

ஏற்கனவே இருந்த ஓட்டுநர் உரிமம் காலவதியாகிவிட்டது. நான் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் என் மகனுக்கு சொந்தமானது. அந்த வண்டிக்கு பதிவு சான்றிதழ் 2019 ஆண்டிலேயே காலாவதியாகிவிட்டது, மேற்படி வண்டியை ஓட்டகூடாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முத்தூரில் இருந்து கொடுமுடி செல்லும் வாகனங்கள் சாலையின் மையபகுதியில் இருக்கும் வெள்ளைகோட்டிற்கு வடபுறமாக தான் செல்வார்கள் என்றால் சரிதான். கொடுமுடியில் இருந்து முத்தூர் செல்லும் வாகனங்கள் வெள்ளைகோட்டிற்கு தென்புறமாக தான் செல்லும் என்றால் சரிதான். முத்தூர் ரோட்டில் இருந்து வந்து கொடுமுடி செல்லும் வளைவில் தான் வேட்டுவபாளையம் செல்லும் பிரிவு சாலை உள்ளது என்றால் சரிதான்.

2. நான் முத்தூர் ரோட்டில் இருந்து வந்து வேட்டுவபாளையம் பிரிவில் திரும்பும்போது தான் இந்த விபத்தானது ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் நவலடியான பர்னிச்சர் கடை உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து 200 அல்லது 300 அடி தூரத்தில் தான் ராஜா சைக்கிள் கடை உள்ளது என்றால் சரிதான். நான் வண்டியில் இருந்து கீழே விழுந்த உடன் பக்கத்தில் இருந்தவர்கள் மற்றும் ராஜா சைக்கிள் கடையில்இருந்த சேகர் என்பவரும் என்னை தூக்கிவிட்டார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதி ஒரு வளைவான பகுதி என்பதால் எதிரி தனது வாகனத்தை வேகமாக ஓட்டிவருவதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் முத்தூர் சாலையில் இருந்து வந்து வேட்டுவபாளையம் பிரிவில் திரும்பும் போது இண்டிகேட்டர் போடவில்லை என்றாலும் எந்தவித சைகையும் செய்யவில்லை என்றால் சரியல்ல சைகை செய்தேன். விபத்து சம்பந்தமாக நஷ்டஈடு தொகை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். எதிரி தனது வாகனத்தை போக்குவரத்து விதிகளை அனுசரித்து மெதுவாக ஓட்டிவந்தார் என்றாலும், அந்த சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தை ஓட்டத்தெரியாமலும், சாலையில் ஓட தகுதி இல்லாத வாகனத்தை வேகமாக ஓட்டி வந்து எவ்வித சைகையும் காண்பிக்காமல் உடனே திரும்பி விட்டதால் தான் இந்த விபத்து நடந்தது என்று சொன்னால் சரியல்ல. விபத்து

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.17 16:09:09 +0530

சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டிவந்து நானாகவே விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு முழு தவறு என்னுடையதுதான் என்றால் சரியல்ல. நான் அதிக நஷ்டஈடு தொகை பெறவேண்டி எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.06.17 16:09:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 107/2024**
**Prosecution Witness**:3

| | | | |
|---|---|---|---|
| Name | **வரதராஜன்** (PW3) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of June 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused absent petition U.s. 355 BNSS is filed and allowed)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரி, பட்டேல் தெருவில் குடியிருந்து கொண்டு முத்தூர் – சிவகிரி செல்லும் ரோட்டில் ராஜா சைக்கிள் கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 30.07.2024ம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் நான் எனது ராஜா சைக்கிள் கடையில் இருந்தபோது விபத்து ஏற்பட்ட ஒரு சத்தம் கேட்டது, எனக்கு முன்பே தெரிந்த சாரதாம்பாள் XL வாகனத்தில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்து வலதுபுறம் திரும்பியபோது வடக்கில் இருந்து மேற்காக வந்த பெரிய இருசக்கர வாகனம் மோதியது, அதில் சாரதாம்பாளுக்கு காலில் சுண்டுவிரலுக்கு அருகில் உள்ள விரலில் காயம்ஏற்பட்டது. மேற்படி பெரிய இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தவர் எனக்கு தெரிந்த சரவணபவன் ஆவார். சிகிச்சைக்காக விபத்தில் அடிபட்ட சாரதாம்பாளை சிவகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

விபத்து நடந்த ரோடு கிழமேலாக வந்து வடக்கே திரும்பி செல்லும் சாலை என்றால் சரிதான். மேற்படி சாலையின் அகலம் சுமார் 60 அடி இருக்கும் என்றால் சரிதான். அந்த சாலையின் நடுவே வெள்ளை கோடுகள் போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். சாலையின் இருபுற ஓரங்களிலும் வெள்ளைகோடுகள் போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். முத்தூர் ரோட்டில் இருந்து வந்து வேட்டுவபாளையம் செல்லும் பிரிவில் திரும்பும்போது தான் நான் சொன்ன விபத்து நடந்தது என்று சொன்னால்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.17 16:09:19 +0530

சரிதான். நானும் சேகர் என்பவரும் கடையில் பேசிகொண்டிருந்தபோது சத்தம் கேட்டு தான் தற்செயலாக திரும்பி பார்த்தோம் என்று சொன்னால் சரிதான். எனது கடைக்கு பக்கத்தில் நவலடியான் பர்னிச்சர் கடை உள்ளது என்றால் சரிதான், இரண்டு கடை தாண்டி உள்ளது. எனது கடைக்கு விபத்து நடந்த இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும். விபத்து நடந்த பகுதி வளைவான பகுதி என்பதால் பெரிய வாகனம் வேகமாக வர வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. முத்தூரில் இருந்து கொடுமுடி செல்லும் வாகனங்கள் வெள்ளை கோட்டிற்கு இடதுபுறமாக தான் செல்லவேண்டும் என்றால் சரிதான், அதே போல் கொடுமுடியில் இருந்து முத்தூர் செல்லும் வாகனங்கள் வெள்ளை கோட்டிற்கு தென்புற ஓரமாக தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். இந்த விபத்து வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.06.17 16:09:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 107/2024**
**Prosecution Witness**:4

| Name | சேகர் (PW4) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of June 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused absent petition U.s. 355 BNSS is filed and allowed)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது சிவகிரி, அம்மன்கோவிலில் குடியிருந்து கொண்டு ராஜா சைக்கிள் கடையில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 30.07.2024ம் தேதி மாலை சுமார் 04.30 மணியளவில் நான் ராஜா சைக்கிள் கடையில் வேலை செய்துகொண்டிருந்தபோது ஒரு சத்தம் கேட்டது, அப்போது ஒரு அம்மா TVS வாகனத்தில் முத்தூர் ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்கி நோக்கி வந்து வலதுபுறமாக திரும்பியபோது தெற்கில் இருந்து வந்த Super Splender வாகனம் மேற்காக திரும்பியபோது விபத்து ஏற்பட்டது. விபத்தில் சாரதாம்பாளுக்கு இடது காலில் நான்காவதுவிரலில் காயம் ஏற்பட்டது. போக்கு வண்டி மூலம் விபத்தில் அடிபட்ட சாரதாம்பாளை சிவகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

நானும் வரதராஜனும் கடையில் வேலை செய்துகொண்டிருந்தபோது சத்தம் கேட்டு தான் வெளியே வந்து பார்த்தோம் என்றால் சரிதான். விபத்து எவ்வாறு நடந்தது

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.17 16:09:28 +0530

என்று எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.17 16:09:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 107/2024**
**Prosecution Witness**:5

| Name | அர்ஜுனன் (PW5) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of June 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused absent petition U.s. 355 BNSS is filed and allowed)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது கந்தசாமிபாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாய வேலை செய்த வருகிறேன். கடந்த 31.07.2024ம்தேதி இரவு 09.00 மணிக்கு வேட்டுவபாளையம் செல்வதற்காக நானும் ராஜ்குமார் என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றபோது சிவகிரி போலீசார் முதல்நாள் நடந்த விபத்து குறித்து எழுதிகொண்டிருந்தார்கள். அதற்கு சாட்சி கையொப்பம் கேட்டார்கள், நானும் ராஜ்குமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

முத்தூரில்இருந்து கொடுமுடி செல்லும் சாலையில் உள்ள வளைவில் உள்ள வேட்டுவபாளையம் செல்லும் பிரிவில் நின்று போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.17 16:09:39 +0530

என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்ட தாளில் கையொப்பம் செய்துவிட்டு, அ.சா.2 கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.2 சாரதாம்பாள் எனக்கு உறவினரா என்றால் இல்லை.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.06.17 16:09:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.